பட்டினமும் சூழலும் பிரதேச சபை - 2024

----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பட்டினமும் சூழலும் பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 10 (1) இன் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பட்டினமும் சூழலும் பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின்

காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுசட்டத்தில் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுசட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகளானவை சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபார்சுகள்
(அ)	சபையின் ஆயுர்வேத வைத்திய சாலைகளில் மீளாய்வாண்டின் இறுதியில் காணப்படுகின்ற மருந்துப் பொருட்களின் இறுதி மீதியான ரூபா 7,709,382 நிதிக் கூற்றுக்களில் சொத்தாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை	இனிவருங் காலங்களில் நிதிக்கூற்றில் சொத்தாக காட்டப்படும்.	நிதிக் கூற்றுக்களில் சொத்தாக வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டில் நிறைவேற்றப்பட்ட கட்டிடம், தளபாடம் மற்றும் அபிவிருத்தி வேலை ஆகிய மூலதனச் செலவுகளுக்காக கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய ரூபா 14,317,172 நிதிக்கூற்றுக்களில் பொறுப்பாகக் காட்டப்பட்டிருக்கவில்லை.	இனி வருங்காலங்களில் இவை தனியாக காட்டப்படும்.	கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய தொகை நிதிக் கூற்றுக்களில் பொறுப்பாகக் காட்டப்படல் வேண்டும்.

1.7 இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு		இணக்கமின்மை	சபையின் கருத்துரைகள்	சிபார்சுகள்
(அ)	1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் பிரிவு 182	முற்பணங்களினை பதிவளிப்பதற்கு உரிய அமைச்சரின் அனுமதியுடன் செய்யப்பட வேண்டிய போதிலும் 1990 ஆம் ஆண்டு முதல் 2013 ஆண்டு வரையுள்ள காலப்பகுதியில் வழங்கப்பட்ட முற்பணங்கள் ரூபா 2,356,250 உரிய அமைச்சரின் அனுமதியின்றி பதிவளிக்கப்பட்டிருந்தது..	1990 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆண்டு வரையுள்ள பெறப்பட்ட முற்பணங்கள் யாவும் 2019ம் ஆண்டு சபையின் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையிலே 2019ம் ஆண்டு நிதிக் கணக்குகளிலிருந்து நீக்கப்பட்டுள்ளது.	விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரம் பெற நடவடிக்கை எடுக்கப் படல் வேண்டும்.
(ஆ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571(1), (2),(3)	இரண்டு ஆண்டுகளிற்கு மேற்பட்ட 98 காலம் கடந்த வைப்புக்கள் ரூபா 28,387,783 தொடர்பில் சபை உரிய நபர்களுக்கு திருப்பிக் கொடுக்கவோ அல்லது வருமானக் கணக்கிற்கு மாற்றுவதற்கோ சபை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	தலைமை அலுவலகம் மற்றும் உப அலுவலகங்களில் காணப்படும் காலங் கடந்த வைப்புகள் தொடர்பாக ஆராயப்பட்டு நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதுடன் சீர் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.	வைப்புக்களின் வகைகளினை இனங்கண்டு துரிதமாக தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2024 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 21,581,807 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 66,570,633 ஆக இருந்தது.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

	வருமான மூலம்	2024				2023			
		மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா	பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா	சேகரிக்கப் பட்ட வருமானம் ரூபா	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை ரூபா	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா	பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா	சேகரிக்கப் பட்ட வருமானம் ரூபா	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை ரூபா
(i)	வீதவரியும் வரியும்	34,483,815	56,603,509	22,875,868	33,727,641	35,967,000	52,318,980	23,967,875	28,351,105
(ii)	வாடகை	15,995,000	6,981,121	4,327,697	2,653,424	8,007,200	8,550,642	7,289,032	1,261,610
(iii)	அனுமதிப்பத்திரக் கட்டணம்	9,640,710	3,099,195	2,996,445	102,750	8,406,080	8,181,985	8,181,985	-
(iv)	ஏனையவருமானம்	3,676,400	2,534,934	2,534,934	-	3,542,500	3,346,838	1,260,727	-
	கூட்டுத் தொகை	63,795,925	69,218,759	32,734,944	36,483,815	55,922,780	72,398,445	40,699,619	29,612,715

2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் அனைத்து வருமானங்களையும் சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபார்சுகள்
(அ) வீதவரியும் வரியும்		
மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான வீதவரி நிலுவை ரூபா 33,727,641 தொகையினை அறவீடு செய்வதற்கு 01 தொடக்கம் 08 வருடத்திற்கும் மேலாக சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	துண்டுப் பிரசுரம், ஒலிபெருக்கி மூலமும் மக்களுக்கு தகவல் வழங்கப்படுவதுடன் மேலும் அதிகளவான நிலுவைகள் காணப்படும் ஆதனங்களுக்கு சிகப்பு அறிவித்தல் வழங்கப்பட்டு வருகின்றது.	ஆதனவரி நிலுவைகளை விரைவாக அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஆ) வாடகை		
2014 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டு இறுதி வரையான வியாபாரத் தலங்கள், விடுதி மற்றும் சந்தைகளுக்கான வாடகை மற்றும்	வியாபாரத்தலங்கள், விடுதி மற்றும் சந்தைகளுக்கான வாடகை மற்றும் குத்தகை தொடர்பாக உப	நிலுவைகளை அறவிடுவதற்கான நடவடிக்கை

சந்தைகளுக்கான குத்தகை ரூபா 2,653,424 இனை மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிடுவதற்கான நடவடிக்கை சபையினால் எடுக்கப்பட்டிருக்க வில்லை.	அலுவலகங்களிற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.எனவே வருமான பரிசோதகர் மூலம் அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்	எடுக்கப்படல் வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவுகளின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்கள் முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொது மக்களின் நல்வாழ்வு, வசதிகளும் நலன்புரியும் ஆகியன சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபார்சுகள்
(அ)	வெள்ளை மணல் உப அலுவலகத்திற்குச் சொந்தமான 03 விடுதிகளில் 40 ஆண்டுகளுக்கு மேலாக வெளிநபர்கள் குடியிருக்கின்றனர். இருப்பினும், சபையினால் இதுவரை அவர்களுக் கெதிராக எதுவித சட்ட நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்க வில்லை.	வெள்ளை மணல் உப அலுவலகத்திற்கு சொந்தமான விடுதிகள் தொடர்பாக மீள்பரிசீலணை செய்து அறிக்கை சமர்ப்பிக்கப்படும்.	வெளிநபர்களை அகற்றுவதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஆ)	மொபிடல் நிறுவன உடன்படிக்கையுடன், 2021 மார்ச் 22 ஆம் திகதி சபையின் 14 வாகனங்களிற்கு GPS தொழில்நுட்பத்திற்கு நிறுவுதல் மற்றும் வாடகைக்காக மீளாய்வாண்டு இறுதிவரை ரூபா 514,940 செலவிடப்பட்டிருந்தது. எனினும், GPS இனூடாக வாகனங்களின் நகர்வு, பயன்பாடு, அறிக்கைகள் சபையில் பேணப்பட்டிருக்கவில்லை.	எமது சபையின் வாகனங்களில் பொருத்தப் பட்டுள்ள GPS System ஆனது சரியான முறையில் பயனளிக்காமையினால் ரத்து செய்யப்பட்டு நேரடிக் கண்காணிப்பின் கீழ் மேற்கொள்ளப் படுகிறது.	வாகனங்கள் மற்றும் பயன்பாட்டை அறியக்கூடிய வகையில் செயற்திட்டம் செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப் படல் வேண்டும்.

3.2 கைவிடப்பட்ட செயற்பாடுகள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபார்சு
சபையினால் கோணேசபுரியில் 2023 ஆம் ஆண்டில் ரூபா 9,667,116 இல் நிர்மாணிக்கப்பட்ட நாய்கள் பராமரிப்பு நிலையமானது, தற்போது எதுவித நாய்கள் பராமரிப்பு நடவடிக்கைகளும் இடம்பெறாது கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.	தனியார் நிறுவனம் ஒன்றினால் மார்ச் மாதம் நாய்களுக்கான கருத்தடை சிகிச்சை செய்யப்பட்டு விடப்பட்டுள்ளது. அத்துடன் இடமானது எதிர்கால தேவைப் பாட்டிற்கேற்ப பயன்படுத்தப்படும்.	உரிய செயற்பாடானது முன்னெடுக்கப் படல் வேண்டும்.

3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபார்சு
சபையினால் பராமரிக்கப்படும் 45 வாகனங்களில் வேறு அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களின் பெயரிலுள்ள 19 வாகனங்களின் உரிமையினை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	உரிமை மாற்றம் செய்வதற்கும் அதன் பெறுமதிக்கான மதிப்பீட்டு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.	சபையின் பெயரிற்கு வாகனங்களின் உரிமையினை மாற்றுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

3.4 செயற்திட்டங்கள், செயற்பாடுகள் அல்லது மூலதன வேலைகளில் தாமதங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபார்சு
திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகத்தினால் சபைக்கு ஒதுக்கப்பட்ட 100 பேர்ச் காணியினை புனரமைப்புச் செய்வதற்காக ரூபா 01 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதற்கமைவாக ரூபா 772,500 செலவீட்டில் சுற்றுவேலி அமைப்பதற்கான மூலப்பொருட்கள் 2021 திசெம்பர் 02 திகதியில் கொள்வனவு செய்யப்பட்டு கணக்காய்வுத்திகதி வரையிலும் அனைத்து மூலப்பொருட்களும் களஞ்சியப்படுத்தப்பட்ட நிலையில் குறித்த செயற்பாடானது, நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.	இக் கழிவுகளை கொட்டுவதால் காட்டு யானைகளின் பிரவேசம் அதிகமாக காணப்படுகிறது. குறித்த நிறுவனத்திற்கு காணி உரிமை தொடர்பான ஆவணங்கள் பூர்த்தி செய்யப் படாமையால் யானை வேலிக்கான முதலீட்டை செய்யாமல் காலந் தாழ்த்தி வருகிறது. இதனால் சபையினால் உருவாக்கப்படும் வேலிகளிற்கு சேதம் ஏற்படும் என்பதால் கால தாமதம் ஏற்படுகின்றது.	உரிய நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படல் வேண்டும்.

3.5 ஏனைய அமைப்புக்களுக்கு விடுவிக்கப்பட்ட வளங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபார்சு
2024 இல் சபையில் ரூபா 31 மில்லியன் நிலையான வைப்பாக இருந்த போதிலும் அத்தொகையினையும் மற்றும் ஏனைய சபையின் நிதியினையும் பயன்படுத்தி மேற்படி திட்டத்தினை சபையினால் ஏற்படுத்தி 100 சதவீதம் வருமானத்தை உழைக்கக் கூடியதாக இருந்த போதிலும் அதைவிடுத்து ஒரு தனியார் கம்பனியிடம் சபையின் கட்டிடத்தின் மேல் சூரிய மின்சக்தி அமைத்து 06 சதவீதம் தொடக்கம் 18 சதவீதம் வரை வருமானம் சபைக்கு கிடைக்ககூடியவாறு ஒப்பந்தம் செய்யப்பட்டிருப்பதோடு பெறும் வருமானங்களில் 82 சதவீதம் தொடக்கம் 94 சதவீதம் வரை தனியார் நிறுவனத்திற்கு வழங்க இவ் ஒப்பந்தம் செய்யப்பட்டிருப்பது பிரதேச சபையின் சட்டதிட்டங்களுக்கு எதிர்மறையாக இவ் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது.	சூரிய மின்சக்தி (Solar Power System) திட்டத்திற்காக முன்னாள் கௌரவ ஆளுநரால் அறிவுறுத்தப்பட்டதாக உள்ளூராட்சி ஆணையாளரது EP/14/CLG/ Rooftoplar/2024 ஆம் இலக்க 08.07.2024ம் திகதிய கடிதத்தின் பிரகாரமே எமது சபையால் ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டது.	1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரகாரம், உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபார்சு
2022 திசெம்பர் 15 ஆந் திகதிய PT/18/2022 ஆம் இலக்க மாகாணத் திறைசேரி சுற்றுநிருபத்திற்கமைய நிதிக்கூற்றுக்கள் 2025 பெப்ரவரி 28 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் சபையினால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2025 மார்ச் 28 ஆம் திகதியே கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2018 இன்	இனி வருங்காலங்களில் உரிய திகதியில் நிதிக்கூற்று கணக்காய்விற்கு சமர்பிக்கப்படும்	நிதிக்கூற்றுக்களினை உரிய திகதியில் அல்லது அதற்கு முன்னராகவோ கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(2) உப பிரிவிற்கமைய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை

4.2 உள்ளகக் கணக்காய்வு

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபார்சு
2021 திசெம்பர் 24 ஆந் திகதிய முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை இல. DMA/01-2019(i) இன் பிரகாரம், உள்ளகக் கணக்காய்வாளரினால் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	2025ம் ஆண்டிற்கான உள்ளக கணக்காய்வு திட்டமானது 4ம் காலாண்டு முகாமைத்துவ கணக்காய்வு குழு கூட்டத்தில் கணக்காய்வு அத்தியட்சகரின் ஆலோசனையுடன் தயாரிக்கப் பட்டுள்ளது.	உள்ளகக் கணக்காய்வு திட்டம் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.